24th August 1970]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : குறிப்பாக அக்ரோ ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் என்ற ஒரு நிறுவனம் 20, 28 வங்கிகள் ஒன்றாகச் சேர்ந்து உண்டாக்கப்பட்டிருக்கிறது. அந்த நிறுவனம் இவர்களுக்கு உதவி செய்ய முன் வந்திருக்கிறது. மத்திய அரசு பரிசீலனை செய்து எந்த அடிப்படையில் இதைச் செய்ய வேண்டுமென்று வரையறுத்திருக்கிறதோ அந்த வகையில் திட்டமிட்டு மாநில அரசு செய்து வருகிறது.

திரு. கே. ராஜாராம் : மணல் பிரதேசத்தில் சிமிண்ட் லைனிங் போட்டு அதற்கு மேல் மணல் பரப்பி விவசாயம் செய்யும் திட்டம், திருநெல்வேலியில் திருச்செந்தூர் பகுதியில் தனிப்பட்ட நிலச்சுவான்தார்கள் செய்து, வெற்றிகரமாக இருப்பதாக நிரூபித்திருக்கிறார்கள். அதைப் பார்த்துத்தான் இந்தத் திட்டத்தை அரசாங்கம் நடத்த முற்பட்டது. அது வெற்றிகரமாக நடப்பதாகச் சொல்லப்படுகிறது. தூத்துக்குடிப் பகுதியிலும் சிறுசிறு பகுதிகளாக எடுத்து, வெற்றிகரமாகச் செய்யமுடியுமா என்று பார்த்து, அதற்குப் பின்தான் முழுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அரசாங்கம் கருதுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : திட்டமிட்டிருப்பது 6,000 ஏக்கர். இன்னும் கையகப்படுத்தவேண்டிய நிலம் ஏராளமாக இருக்கிறது. அதைக் கையகப்படுத்தி வண்டல் மண் கொட்ட வேண்டும். சிமிண்ட் லைனிங் போட வேண்டும். ஆரம்ப வேலைகளைச் செய்வதற்கான வசதி வாய்ப்புகளும் வாகன வண்டி வசதியும் இப்போது அங்கே இல்லை. போதுமான டிரில்லிங் மிஷின் கிடைக்கவில்லை. ஆரம்பக் கட்டத்தில்தான் இந்த வேலை இருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : என்னுடைய கேள்வி, ஒரே மொத்தமாக விசாலமான பிரதேசத்தை எடுத்துக்கொண்டு விவசாயம் செய்து பார்ப்பதில் பெரும் தொகை நஷ்டம் ஏற்படாமல் இருப்பதற்காக, சிறிய இடத்தை எடுத்து அங்கு பரிட்சார்த்தமாக நடத்தி வெற்றிகரமாக நடக்கும் என்று தெரிந்த பிறகு, பெரும் அளவில் அதைச் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கையகப்படுத்தப்பட்ட இடங்களில் விவசாயம் செய்ய அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

Pilot scheme for small formers

* 5. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleasd to **state :**

(*a*) whether there is any proposal under the consideration of the Government to implement a pilot scheme for the progress of small farmers in South Arcot district; and

(*b*) if so, the aims of the scheme?

சிறிய விவசாயிகளின் முன்னேற்றத்திற்கான முன்னோடி திட்டம்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் சிறிய விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக முன்னோடி திட்டமொன்றை செயல்படுத்தும் செயற்குறிப்பு தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், இத்திட்டத்தின் நோக்கங்கள் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் நோக்கங்களாவன :—

1. பாசன வசதியுள்ள அடக்கமான பகுதிகளில் ஆதாயமளிக்கும் வகையில் வேளாண்மை உற்பத்தியை மேற்கொள்வதற்காக தாமே செயல் படத்தக்கதாகச் சிறு குடியானவர்கள் யார்யார் எனத் தெரிந்து கொள்ளுதல்.

2. ஓரளவு வசதி பெற்ற, வசதிக்குறைவான குடியானவர்களின் நிலையில் முன்னேற்றம் ஏற்படுத்தல்.

3. பாசனம், நில மேம்பாடு, தொழில் நுட்ப ஆலோசனை வழங்குதல் போன்ற குறிப்பான தேவைகள் சம்பந்தமாகச் சிறு குடியானவர்களுக்கு உதவி செய்தல்.

4. புதிய பயிர் முறைகளைப் புகுத்துதல்.

5. மிகுபயன்தரும் தானிய ரகங்களைப் பயன்படுத்துவதுடன், நவீன சாகுபடி முறைகளையும் கையாண்டு ஏக்கர் ஒன்றுக்கான விளைச்சலை அதிகப் படுத்தல்.

6. மேம்பட்ட விஞ்ஞானத் தொழில் நுட்ப உத்திகள் அனைத்தும் குறித்து குடியானவர்களுக்கு ஆலோசனை கூறுதல்.

7. முக்கியமான வேளாண்மைப் பணிகள் குறித்து, குறிப்பாக, நிலத்தைப் பண்படுத்தல், உரமிடுதல், அறுவடை செய்தல் போன்ற பணிகள் குறித்துப் போதுமான அளவு வழக்கமான பணிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

8. பரிந்துரைக்கப்பட்ட அளவிற்கும் உரிய காலத்திலும் கூட்டுறவு நிறுவனங்கள் அல்லது வணிக வங்கிகள் மூலம்போதுமான அளவு கடன் வழங்க வகை செய்தல்.

9. அதிக ஆதாயம் கிடைப்பதற்காக விளை பொருள்களை ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைகள் மூலமாக அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பதற்கு வசதிகள் செய்து கொடுத்தல்.

10. எந்தத் துறைகளில் வளர்ச்சித் திட்டப்பயன்கள் கிடைக்கச் செய்ய வேண்டிய தேவை மிகுதியாக உணரப்படுகிறதோ அந்தத் துறைகளில் ஊக்கமூட்டும் புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : இராமநாதபுரம் போன்ற நெடுநாளாக மிகவும் விவசாயத்தில் பின்தங்கியுள்ள, வசதியற்ற மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா ? அல்லது அந்தப் பகுதிகளுக்கு வேறு ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சிறு குடியானவர்களுக்கு என்ற இந்தத் திட்டத்தில் இப்போது தென்னாற்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய இம் மூன்று மாவட்டங்களில் முதலில் தென்னாற்காடு மாவட்டத்தில் தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். மத்திய அரசாங்கம் தென்னாற்காடு மாவட்டத்திற்குத் தான் ஒப்புக்கொண்டது. பிறகு அவர்களாக மேலும் இரண்டு மாவட்டங்களை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அதை ஏற்று, நம் அரசாங்கம் மதுரை, திருநெல்வேலி ஆகிய இரு மாவட்டங்களை

24th August 1970]

எடுத்துக்கொள்ளுகிறோம் என்று சொல்லியது. அதற்கு அவர்கள் ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். ஆனாலும் இப்போது தென்னாற்காடு மாவட்டத்தில் தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலிக்கும், மதுரைக்கும் இப்போது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திரு. கே. ராஜாராம் : சிறு குடியானவர் என்றால் என்ன? எத்தனை ஏக்கர் வைத்திருப்பவர்கள் சிறு குடியானவர்கள் என்று கருதப்படுவார்கள் என்பதற்கு இலக்கணம் ஏதாவது வைத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மத்திய அரசு இதற்கு எந்த இலக்கணமும் கூறவில்லை. நாமாகவே 2 முதல் 3 ஏக்கர் வரை நஞ்சை நிலம் வைத்திருப்பவர்களையும் 3 ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை புன்செய் நிலம் வைத் திருப்பவர்களையும் சிறு குடியானவர்கள் என்று அரசாங்கம் கருதலாம் என்று வைத்திருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, whether by this Scheme tenant-farmers are likely to be helped or it will not apply to tenants at all?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது குறித்த குறிப்பெதுவும் இங்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி கேட்டால் விளக்கமாகச் சொல்லப்படும்.

Harijan Hostels

* 6. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state the numbr of seats, among those reserved for Harijan students, remaining vacant on account of dearth of Harijan students in the different Harijan hostels in Ramanathapuram distric in the year 1968–69?

அரிசன மாணவர் இல்லங்கள்

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

1968-69-ஆம் ஆண்டில் இராமனாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரிசன மாணவர் இல்லங்களில், அரிசன மாணவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட இடங்களில், எத்தனை இல்லங்களில் மாணவர்கள் வராத காரணத்தால் எத்தனை இடங்கள் காலியாக இருந்தன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 39 மாணவர் இல்லங்கள். 449 காலி இடங்கள்.

திரு. பி. திருஞானசம்பந்தம் : தலைவரவர்களே, இந்தப் பூர்த்தி செய்யப் படாத காலியிடங்களில் பின்தங்கிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்கு, அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?